***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//184 /2021 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ராஜதுரை |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 12.06.2025

**முதல் விசாரணை**

நான் திருவேட்டநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள். 24.05.2020ம் தேதி மாலை 03.30 மணியளவில் மாட்டு சாணத்தை எடுத்து தோட்டத்தில் வைத்து விட்டு டிராக்டரில் கண்ணன் என்பவர் புளியந்தோப்பு வழியாக வந்த போது எதிரிகள் 4 பேர் மற்றும் அவர்களுடன் இரண்டு, மூன்று நபர்கள் குடித்து கொண்டிருந்தார்கள். நான் பாதையை விட்டு கொஞ்சம் தள்ளி நில்லுங்கள் என்று சொன்னேன். எதிரிகள் என்னிடம் வேறு பாதை வழியாக போக வேண்டியதானே என்று சுண்ணிபய, புண்ட என்று கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார்கள். எதிரி ரவீந்திரனும், செல்வமும் அசிங்கஅசிங்கமாக பேசியவுடன் ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று நான் கேட்டேன். எதிரி ரவீந்திரன் என் நெஞ்சில் மிதித்து கீழே தள்ளி விட்டான். எதிரி பெருமாள் பீர் பாட்டிலால் இடது கையிலும், நெஞ்சிலும், இடது தொடையிலும் குத்திவிட்டார். (மேற்படி சாட்சி இடது கையிலும், இடது விலாப்பகுதிதியலும் உள்ள தழும்புகளை காண்பித்து சாட்சி கூறினார்) பின்னர் எனது சத்தம் கேட்டு அங்கு கோயிலில்இருந்தவர்கள் வந்தார்கள். வைரமுத்து என்பவர் என்னை புளியங்குடி

அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். புளியங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் அங்கு வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போன்று தான் புகார் வாக்குமூலத்திலும், போலிஸார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் முழு நேரமாக விவசாயம் செய்து வருகிறேன். 1,2 எதிரிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 3ம் எதிரி ரவீந்திரன் என்பவர் எந்த ஊரை சார்ந்தவர் அவர் பெயர் விபரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் பேப்பரில் பார்த்து தெரியும். எங்கள் ஊரிலிருந்து எனது வயல் எவ்வுளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டு கி.மீ தூரம் இருக்கும். நான் வெளியே வாடகைக்கும் மாட்டுச்சாணம் எடுத்து செல்வேன். சம்பவத்தன்று இரண்டு நடை எடுத்து சென்றேன். முதல் நடை காலையில் 7.00 மணிக்கு சென்று 10.00 மணிக்கு வந்தேன். இரண்டாவது நடை 12.00 மணிக்கு சென்று 3.30 க்கு புளியந்தோப்பிற்கு வந்துவிட்டேன். நான் சொல்லும் டிராக்டர் மற்றும் டிரெய்லரின் உரிமையாளர் பெயர் திருமலை வேல் கோனார். ஓட்டுநர் உரிமம் உள்ளது. சம்பவ தினத்தன்று குப்பையை எங்கு அள்ளினேன் என்றால் ரைஸ்மில்லில் அள்ளினேன். எங்கு கொண்டு சென்றேன் என்றால் சண்முகவேல் தோப்பிற்கு கொண்டு சென்றேன். சண்முகவேல் திருவேட்டநல்லுரைச் சார்ந்தவர்.

சண்முகவேல் வயலுக்கு குப்பை கொண்டு போனதாக புகார் வாக்குமூலத்திலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் குப்பை கொண்டு போனதை மட்டும் சொல்லி உள்ளேன். குப்பையையே வறு வழியாகவும் அந்த இடத்திற்கு கொண்டு செல்லலாம் என்றால் பரும்பு வழியாக வந்தால் தான் பக்கம். வேறு வழியாக வந்தால் 5 கி.மீ சுற்றி வரவேண்டும். குப்பை கொண்டு போகும் போது சம்பவ இடத்தில் யாரும் இல்லை. குப்பை கொண்டு போகும் போது எந்த சம்பவமும் நடக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை சுற்றி சூச்சமுடையார் அய்யனார் கோவில், கண்ணன் என்பவரின் புளியந்தோப்பு, சங்கரகோனார் வயல், தண்ணீர் பம்பு செட், பனை மரம், தேக்குமரம், பரும்பு ஓடை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 7 பேர் இருந்தார்கள். எதிரிகள் 4 பேர் போக வேறு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் முத்து சாமி, வடிவேல், அரசப்பன் ஆகியோர் இருந்தார்கள். சம்பவம் நடந்த இடத்தில் 7 நபர்கள் இருந்ததாக புகார் வாக்குமூலத்திலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இருந்த நபர்கள் மது அருந்தி கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். எனக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் எப்போதாவது வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வாங்கி வந்து குடிப்பேன். காயம் பட்டதாக சொல்லும் இடத்தில்

ரத்தம் எதுவும் வந்து சட்டையில் பட்டதா என்றால் சுற்றி இருந்த 4 பேர் சட்டையை கிழித்து விட்டார்கள். அங்கு உள்ள மண்ணில் ரத்தம் படிந்தது. உடுத்தி இருந்த வேஷ்டியில் ரத்தம் படிந்திருந்தது. அதை அரசு மருத்துவமனை குப்பைத் தொட்டியில் கழற்றி போட்டார்கள்.

போலிஸ் விசாரணையில் ரத்தம் படிந்த ஆடைகளை ஒப்படைத்தேனா என்றால் இல்லை. குப்பைத்தொட்டியில் போலிஸார் பார்த்த பின்பு போட்டு விட்டேன். போலிஸார் அதை வாங்கவில்லை என்றால் வாங்க வில்லை பார்த்தார்கள். சம்பவம் எவ்வுளவு நேரம் நடந்தது என்றால் 5 நிமிடத்திற்கு உள்ளாகவே நடந்தது. சம்பவம் முடிந்து எவ்வுளவு நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் முக்கால் மணி நேரத்தில் சென்றேன். முதல் விசாரணையில் கோவிலில் இருந்து வந்த நபர்கள் என சொல்லி உள்ளவர்களின் பெயர்களை குறிப்பிட முடியுமா என்றால் ரத்த மயக்கத்தில் இருந்ததால் சரியாக ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் மயக்கமாக இருந்தேனா என்றால் மயங்கவில்லை. அதிக ரத்தம் வந்ததை பார்த்தவுடன் படபடப்பாகி விட்டது. மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் தான் அழைத்து சென்றார்கள். வைரமுத்து சம்பவ இடத்திற்கு என்ன காரணத்திற்காக வந்தார் என்றால் மேற்கே அவருக்கு தோப்பு உள்ளது. வைரமுத்து தோப்பு பார்க்க தான் வந்தார் என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்திலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் கூட்டமாக இருந்ததால் ஆட்களை பார்த்து வந்ததாக வைரமுத்து சொன்னார்.

போலிஸாரிடம் நான் தான் வாக்குமூலம் கொடுத்தேன். எனக்கு எழுத படிக்க தெரியும். போலிஸார் எழுதிய வாக்குமூலத்தை படித்து பார்த்தேன். புகார் வாக்குமூலம் வாங்கிய பிறகு போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் ஒரு முறை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். வாக்குமூலம் வாங்கிய நாளில் இருந்து எத்தனை நாட்களில் விசாரித்தார்கள் என்றால் சரியாக தெரியவில்லை. விசாரிக்கும் போது எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் விசாரிக்கும் முன்பு ஒரு கையெழுத்து போட்டேன், மொத்தம் இரண்டு கையெழுத்து போட்டேன். முதல் விசாரணையில் புளியந்தோப்பு வழியாக வந்த போது எதிரிகள் குடித்து கொண்டு இருந்ததாக சொல்லி உள்ளதை தான் புகார் வாக்குமூலத்திலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம். ரவீந்திரன் நெஞ்சில் மிதித்து கீழே தள்ளியதாக புகார் வாக்குமூலத்திலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சத்தம் கேட்டு கோவிலில் இருந்து ஆட்கள் வந்ததார்கள் என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்திலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் சொல்வது போல் சொன்ன நாள், நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் டிராக்டரில் வந்து பரும்பு ஓடையில் தெரியாமல் மண் அள்ளுவது வழக்கம் என்றாலும் இது சம்பந்தமாக எதிரிகள் என்னிடம் கேட்டு எங்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்தது என்றாலும் நான் தான் அளவுக்கதிகமாக குடித்து விட்டு ஏற்கனவே விலாப்பகுதியில் மேலும்

குடிப்பதற்காக மது பாட்டில் வாங்கி வைத்திருந்தேன் என்றாலும் நான் தான் டிராக்டரில் இருந்து நிலை தடுமாறி கூர்மையான கற்களின் மீது விழுந்து அதில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi